

படகோட்டியின்
பாடல்
காசி ஆனந்தன்

# படகோட்டியின் பாடல்

காசி ஆனந்தன்

ரகுநாதன் பதிப்பகம்
303, காலிவீதி, கொழும்பு-3.

முதற்பதிப்பு: பிப்ரவரி. 1972.

விலை: ரூபா. 2—50.

ஆசிரியரின் பிற நூல்கள்:

தமிழன் கனவு
உயிர் தமிழுக்கு
தமிழா உன்னைத்தான்!

வெளிவர இருப்பவை:

நீராட்டு
மாத்திரைக் கதைகள்
அண்ணு காவியம்
சுவைத்தேன்
செல்வா எங்கள் செல்வம்
காசி ஆனந்தன் கவிதைகள்
சித்தார்த்தை
(சிறுகதைகள்)
இராவணன்
(நாடகம்)

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

# நான்

என்னுடைய வாழ்வே தனி.


சுவையான உலகத்தில் சின்ன வயதிலேயே நான் மிகையான அனுபவங்களைப் பெற்றுவிட்டேன். எல்லாம் இறைவனுக்கும் எனக்கும் இடையில் உள்ள பெரிய உறவின் விளைவுகளே!

ஒரு படகோட்டி அவனுக்கு விரும்பிய திசையிலே ஓடத்தை நடத்திச் செல்கிறான்... இனிய நீர் அலைகளில் கவிஞன் வாழ்க்கை தன்பாட்டில் நகரும் அழகே 'படகோட்டியின் பாடல்!'

கண்ணீரும் புன்னகையும் நான் கண்டு சுவைத்தவைகள்.

எல்லாவற்றையும் ஒளிவு மறைவின்றி இங்கே புலம்புகிறேன்.

இதுவும் ஒரு நிம்மதியே!



# அவர்

1962 ஆம் ஆண்டு தமிழகத்தில் ஈரோடு சின்ன சாமி அவர்களை ஆசிரியராய்க் கொண்டு வெளிவந்த 'சமநீதி' இதழில் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் 'படகோட்டியின் பாடல்' எனும தலைப்பில் எழுதிய தொடர் கட்டுரைகளின் தொகுப்பையே நூல் வடிவில் வெளியிடுகிறோம்.

தமிழகமும் ஈழமும் போற்றும் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் இத்தத்துவத் தமிழ் நூல் தமிழன்னைக்கோர் எழில் ஆரமாகும்.

சொற்கள் ஆற்றொட்டமாய்ச் செல்லும் சுவையால கவிஞரின் தத்துவத்தமிழை கற்போர் அனைவர்க்கும் நாங்கள் காணிக்கை ஆக்குகிறோம்.

இந் நூலை வெளியிட எமக்கு உரிமை தந்த கவிஞர், அட்டை ஓவியம் வரைந்துதவிய கலைஞர் வீ. கே. தத்துவப் படங்கள் வரைந்தளித்த கலைஞர் சமரா ஆகியோருக்கு எங்கள் நன்றிகள்.

அன்பன்,
க. பத்மநாதன்.
உரிமையாளர்:
ரகுநாதன் பதிப்பகம்.



## கவிஞனும் பிறப்பும்

இறைவனின் உலகத்தில் இருந்து மனிதனின் பூமியை நோக்கி வரும் வழியில் நான் சில நாட்கள் தங்கியிருந்து ஓய்வெடுத்த சத்திரத்துக்கு 'அன்னை' என்று பெயர்.

நான் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்ததும் என்னிடமிருந்த தெய்வீக அம்சங்களை யெல்லாம் அங்கே களைந்து வைத்துவிட்டு அவளிடமிருந்த அசிங்கமான மனித உணர்வுகள் அனைத்தையும் என்னுடைய தலையில் சுமந்துகொண்டு பூமிக்கு வந்து சேர்ந்தேன்.

இப்பொழுது நான் எந்தச் சத்திரத்தில் தங்கியிருந்தேனோ அந்தச் சத்திரத்தில் ஒரு புதிய ஒளி ஏற்பட்டிருக்கிறது. அந்த இடத்துக்கு ஒரு புதிய மரியாதை தரப்படுகிறது.

நான் விட்டுவந்த தெய்வீக அம்சங்கள் அங்கே இருப்பதால்தான் அன்னையாகிவிட்ட பின்பு இன்று அவள் தெய்வத்தைப் போலக் காட்சியளிக்கிறாள்.

தாய் ஆவதற்கு முன்னர் எந்தப் பெண்ணும் புனிதமானவள் என்று நான் சொல்லமாட்டேன். 'அன்னை' என்ற சொல்லையும் 'காதலி' என்ற சொல்லையும் தவிர உலகத்தில் பெண்ணைக் குறிக்கும் ஏனைய சொற்களெல்லாம் கொடுமையான சொற்களே!

சத்திரத்திலிருந்து மனித உணர்ச்சிகளோடு பூமிக்கு வந்து சேர்ந்த நான்

கவிஞனைப் படைக்கப்பட்ட காரணத்தினால் அந்தக் கீழான உணர்ச்சிகளைத் தூர எறிந்துவிட்டு இதோ தெய்வத்தின் பிரதிநிதியாக உங்கள் முன் பாடத் தொடங்குகிறேன்.

பிறப்பைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உலகத்தில் இரண்டு விதமான பிறவிகள் உண்டு.

'பிறந்து விட்டோம் என்பதற்காக வாழ்கிறோம்' என்று சொல்பவர்கள் மனிதர்கள்... கவிஞன் அப்படி அல்ல – 'வாழ்வதற்காகவே நான் பிறந்தேன்,' என்று அவன் மிகவும் இனிமையாகப் பாடிக் கொண்டிருக்கிறான்.

நண்பர்களே! என்னுடைய பாடல்களுக்குச் செவிகொடுங்கள்... அவை அத்தனையும் இந்த வாழ்க்கையின் சுவையான அனுபவங்களே என்று உங்களுக்கு நான் உறுதி கூறுகிறேன்.

நான் ஒன்று சொல்லட்டுமா? பிறந்த உடனே கண்களைத் திறந்து இந்த உலகத்தைப் பார்ப்பதற்கு முன்னர் நான் அனுபவித்த முதல் இன்பம் அழுகைதான். என்னுடைய வாய் சாப்பிடுவதற்கும்,

சிரிப்பதற்கும், பேசுவதற்கும் முன்பு அழுவதற்கே பயன்பட்டிருக்கிறது.

உலக வாழ்க்கையில் அழுகை என்பது ஒரு பெரிய அனுபவமாகும். மனிதர்களைப்போல் ஒரு நாளும் நான் அழுகையால் பாதிக்கப்படுவதில்லை. அழுகையை ரசிப்பதற்கும் ஆராய்வதற்கும் நான் கற்றுக்கொண்டிருக்கிறேன்.

மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் முதன் முதல் சந்தித்த பெண்ணோடு கடைசி வரை வாழவேண்டும் என்று விரும்புகிறான். முதல் தடவை அவனுக்கு வந்த கடிதத்தைப் பத்திரப்படுத்தி வைக்கிறான். உலகத்தில் பிறந்த உடனே முதன் முதல் அவன் அனுபவித்த அழுகையை மட்டும் ஏன் வெறுக்கிறான் என்று எனக்குத் தெரியவில்லை. இதோ! இப்பொழுது பிறப்பு எனக்குக்கற்றுத் தந்த முக்கியமான ஓர் உண்மையை உங்களுக்கு நான் விளக்கிச் சொல்லப்போகிறேன். 'உலகம் மிகவும் போலித்தனமானது' என்பதே உலகத்துக்கு வந்தவுடன் நான் கற்றுக்கொண்ட முதல் பாடமாகும்.

என்னுடைய தாய் பிள்ளைப்பேறு நோவினால்அழுது கொண்டிருந்த போது

'பிள்ளை செத்துப் பிறந்தாலும் பரவா யில்லை... மனைவி பிழைத்து விட வேண் டும்' என்றுதான் என் தந்தை இறைவனை வேண்டிக்கொண்டிருந்தான். மனிதர்க ளின் அன்பு என்பது பழக்கத்தால் ஏற் படுவது என்பதையும் அது உண்மையான இதயத்தில் இருந்து எழுவதில்லை என் பதையும் நான் அப்போதே கண்டு கொண்டேன்.

இரண்டு நாட்கள் போனபின்பு எந்தத் தந்தை நான் இறந்து விடவேண்டும் என்று இறைவனைக் கேட்டானோ அவனே என்னை மடியில் வைத்துக் 'கண் மணி' என்றும் 'கற்கண்டு' என்றும் கொஞ்சிக் கொண்டிருந்தான். நான் மனம் விட்டுச் சிரித்தேன். உண்மையில் அந்த நிகழ்ச்சி என் வாழ்க்கையில் ஏற் பட்ட ஒரு பெரிய அனுபவமே! மனிதர் களை எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்க வில்லை. இறைவனை மறந்து இவர்கள் எவ் வளவு பெரிய ஆசைகளை வளர்த்துக் கொள்கிறார்கள்? அப்பாவி மனிதர்கள்..

எந்தப் பிள்ளை பிறந்தாலும் இவன் ஒரு பெரிய அமைச்சராகவருவான், நீதிபதி யாக வருவான், வக்கீலாக வருவான் என்றுதான் தாய் தந்தையர்கள் நினைக்
2

கிறூர்களே தவிர எவராவது தங்கள் குழந்தை ஒரு ஞானியாக வரவேண்டும், மகானுக வரவேண்டும் என்று விரும்பு கிறூர்களா? சுயநலவாதிகளின் உலகம்!

இதோ பாருங்கள்... நான் ஒரு பெரிய 'டாக்டர்'ராக வரவேண்டும் என்று தான் என் தந்தை நினைத்தார். ஆனுல் நானே இறைவன் நினைத்தபடி ஒரு நோயாளி யாக இருக்கிறேன்.

மனிதனின் முட்டாள்தனத்துக்கு எல் லேயே இருப்பதாகத் தெரியவில்லை. நான் என்னுல் முடிந்தவரை சில போத னைகளைச் செய்வதற்குக் கடமைப்பட்டி ருக்கிறேன். ஓ! மனிதர்களே! உங்களைப் பற்றி ஒன்றும் பெரிதாக நினைத்துக் கொள்ளாதீர்கள். தெய்வம் என்ற பெரிய வல்லமைக்கு முன்னுல் நீங்கள் மிகமிக அற்பமானவர்களே!

'ஆண்' 'பெண்' என்ற இரண்டு முண் டங்களுந்தான் படைப்புக்குக் காரணம் என்று நீங்கள் கருதுகின்றீர்களா! பாவி களே! உங்களால் வெறும் கூடுகளைத் தான் செய்ய முடியுமே தவிர உயிர்க ளைப்படைக்கின்ற வல்லமை உங்களிடம் இல்லை என்பதை, இந்த நிமிடத்தில்

இருந்தாவது நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்.

படைப்பு என்பது ஒரு பெரிய விஷயமாகும்.

தோற்பையில் காற்றை நிரப்பினால் அது பந்தாகிவிடும் என்பது உண்மையே. தோல்பையை நீங்கள் உற்பத்தி செய்தீர்கள் என்பதைத் தவிர 'உள்ளே இருக்கிற காற்றையும் நாங்கள் தான் உற்பத்தி செய்தோம்' என்று சொல்வீர்களானால் உங்கள் வாதம் நகைப்புக்குரியதாகி விடாதா? மனிதர்களே! மனிதர்களே! தெய்வத்தோடு சண்டைக்குப் போகாதீர்கள்.

நான் உங்களிடம் இறுதியாக மனம் விட்டுக்கேட்டுக்கொள்ள விரும்புவதை இப்பொழுது சொல்லிவிடுகிறேன்... ஓ மனிதர்களே! நான் ஒரு கவிஞனாக இருப்பதால் உங்கள் ஒவ்வொரு அசைவிலும் நான் சித்திரவதைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். தயவு செய்து கொஞ்சம் எட்டி நில்லுங்கள்.

ஆண்டவன் உங்களைக் காப்பாற்றுவானாக!



## கவிஞனும் மனிதனும்

எல்லாவற்றையும் கடந்த இறைவனே....!

ஆயிரம் பந்துகளை வானவெளியில் வீசி விட்டுத் தன்னந்தனியனாக விளையாடும் தலைவனே!

நீ விளையாடும் அழகை நான் ஒருவன் தான் முழுமையாக உணர்கிறேன்.

உன்னுடைய பாதங்களால் உதை வாங்குவதற்குப் பூமி மிகவும் தவம் செய்திருக்கிறது.

ஆனால் ........

பூமியின் மேற்பரப்பில் நடப்பதற்கு என்னுடைய பாதங்கள் என்ன பாவத்தைச் செய்தன என்பதுதான் இதுவரை புரியவில்லை.

நான் வாழ்வதற்காகவே பிறந்தேன். ஆனால் பூமியில் என்னைத்தவிரப் பிறர் எவரும் வாழ்வதாகத் தெரியவில்லையே!

இறைவா...!..... நீ வாய் திறந்து பேசு. உள்ளத்தை மூளைக்கு அடிமையாக்கிவிட்டவர்களை உலகத்தில் நான் பார்க்கிறேன்......

வானத்தில் இருந்த நிலாவை நான் மனிதனுக்கு அருகில் கொண்டு வந்தேன். இங்குள்ளவர்கள் மனிதனைத் தூக்கிக் கொண்டு நிலாவுக்கு அருகில் ஓடுகிறார்கள்......

படகோட்டியின் பாடல்

மிகவும் எளிதாக வானத்து மலர்களைப் பறித்து வந்து நான் பூமியின் மீது தூவினேன்.

இங்குள்ளவர்கள் அதே விண்மீன்களை ஆராய வானத்தில் மனிதர்களைத் தூவுகிறார்கள்.

உலகத்துக்காக நான் என்னை வைத்திருந்தேன்...

இங்குள்ளவர்கள் தங்களுக்காக உலகத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஐயோ தெய்வமே!

உள்ளம் என்ற ஒன்றில், உணர்வு என்ற ஒன்றில்லாத மனிதன் என்ற ஒன்றுக்குப் பக்கத்தில் என்னை நீ எதற்காக அனுப்பிவைத்தாய்?

அவனுடைய பார்வை எனக்குப் புரியவில்லை.

என்னுடைய பார்வை அவனுக்குப் புரியவில்லை.

நீ என்னை மிகவும் விடுதலை உணர்ச்சியோடு உருவாக்கினாய்...

மனிதனோ அடிமை அணுக்களால் மிக வும் உறுதியாகப் படைக்கப் பட்டிருக் கிறான்.

நான் மழை மழையாகக் கவிதைகளைச் சொரிகிறேன்.

அவன் தலை தலையாகப் பிழை பிடித்து மகிழ்கிறான்.

நான் இலக்கியம் என்று சொல்கிறேன். அவன் எனக்கு முன்பாகவே இலக்கணம் என்று அவசரப்பட்டு உச்சரிக்கிறான்.

இறைவா !...

தயவு செய்து என்னிலிருந்து மனிதனை வேறுபடுத்து. இல்லையென்றால் மனிதனி லிருந்து என்னை அப்புறப்படுத்து.

காதலென்று நான் பாடுகின்ற பொழு தெல்லாம் வெறும் தசைக்கட்டிகளைப் பற்றியே கனவு கண்டு கொண்டிருக்கும் ஒருவனை எப்படி நான் நண்பனாக்கிக் கொள்ள முடியும்?

வாயிருப்பது பாடுவதற்காகவே என்று நான் சொல்கிறேன். இல்லை, சாப்பிடு வதற்காகவே என்று அவன் வாதம் செய்கிறான்.

படகோட்டியின் பாடல்

இறைவா !..... இறைவா !......

உலகத்திலுள்ள நிறைவுகளை யெல்லாம் கண்டு மகிழும் எனக்குப் பக்கத்தில் குறைபாடுகளை மட்டுமே பார்க்கும் கொடியவனை ஏன் உருவாக்கினாய் ?

குயில் இனிமையாகப் பாடுகிறது என்று நான் சொல்லும் வேளையில் ஏனோ அவன் குயில் கறுப்பாக இருக்கிறது என்று கண்களை மூடிக்கொள்கிறான்.

மல்லிகையின் மணத்தில் நான் மயங்கும் போது நிறம் வெள்ளைதானே என்று அவன் நெற்றியைச் சுருக்கிக் கொள்கிறான்.

இவனுக்குக் குயிலின் கறுப்பும் பிடிக்கவில்லை; மல்லிகையின் வெள்ளையும் பிடிக்கவில்லை.

அட கடவுளே !...

வாழ்வதற்காகப் படைக்கப்பட்ட என்னை இறப்பதற்காகப் படைக்கப்பட்ட மனிதர்களோடு வைத்திருக்கிறாயே ஏனென்று நான் ஆழமாக எண்ணிப் பார்க்கிறேன்.

முடிவிலே தோற்று விடுகிறேன்.

ஒன்றும் இல்லாத மனிதர்களோடு எல்

லாம் நிறைந்த என்னை நீ எதற்காகச் சேர்த்து வைத்திருக்கிறாய்?

உன்னுடைய கலவை பொருளற்றது.

சிரிக்கவும் அழவும் பிறந்த என்னைச் சிரிப்பது போலவும், அழுவது போலவும் நடிக்கும் உலகத்தில் ஈவிரக்கம் இல்லாமல் இறக்கி விட்டிருக்கிறாய்.

பூமியின் நிறைவுகளை மட்டும் காணும் நான் சிரித்து ஓய்கின்றபோது துயரங்கள் எனக்காக மிகவும் ஆவலோடு காத்து நிற்கின்றன...

அப்புறம்—

இறைவா! நீ என்னை அழவைக்கிறாய்! குறைபாடுகளுக்கும் கொடுமைகளுக்கும் வேறுபாடு உண்டு என்பது நியதி.

நிறைவுகளையும் கொடுமைகளையும் காண்கிறவன் கவிஞன். குறைபாடுகளை மட்டும் கண்டு கொண்டிருப்பவன் மனிதன்.

குறைபாடுகளைக் காண்கின்ற மனிதன் சிரிப்பதும் இல்லை. அழுவதும் இல்லை.

ஆனால்...

3

படகோட்டியின் பாடல்

நிறைவில் கவிஞன் சிரிக்கிறான்.

கொடுமையில் கவிஞன் அழுகிறான்.

குறைபாடுகளைக் காண்பவன் கோபம் ஒன்றையே அனுபவிக்கிறான்.

சிரிப்பதும் அழுவதும் கவிஞனைப் பொறுத் தவரை இரண்டு உண்மைகள்....

மனிதனைப் பொறுத்தவரை இரண்டு பொய்கள்.

இறைவா !...

தெய்வ உணர்ச்சிகளோடு பிறந்த என்னை தயவு செய்து மிருக உணர்ச்சிகளோடு வாழும் உலகத்தில் இருந்து காப்பாற் றுவாயா?

உன்னுடைய மாளிகைக்குப் பக்கத்தில் என்னுடைய குடிசை இருக்கவேண்டும் என்பதுதான் என் ஆசை.

என்னுடைய ஆசை மிகவும் சாதாரண மானது.

நீதியின் கால்களைப் பிடித்துக் கொண்டே உன்னுடைய காதுகளில் நான் வார்த் தைகளைப் போடுகிறேன்.

இறைவனே! என் வெந்து போன வாழ்வுக்கு விடுதலை தா.

எழுத்தை வைத்து வேதம் செய்கின்ற என்னை எழுத்தைவைத்து வியாபாரம் செய்கிறவர்களிடமிருந்து காப்பாற்று.

உனக்கு வேண்டியவன் ஒருவன் தனக்கு வேண்டிய ஒன்றை மிக மிக உருக்கமாகக் கேட்கிறான்—தெய்வமே செவி கொடு.

இரண்டே இரண்டு கோரிக்கைகளை மட்டும் உன் பாதங்களில் வைக்கும் அவனுக்கு நல்ல முடிவைத்தா!

மனிதர்களிடமிருந்து அவன் நிச்சயமாகக் காப்பாற்றப்பட வேண்டும்.

இல்லையென்றால் கவித்துவம் அவனிடமிருந்து பறிக்கப்பட வேண்டும்.

இறைவா! நீ இந்த இரண்டில் என்ன சொல்கிறாய் என்பதை இன்றே முடிவு செய்! இப்போதே சொல்லிவிடு!





## கவிஞனும் அறிவும்

நான் ஒரு பெரிய உண்மையைக் கண்டு பிடித்திருக்கிறேன்.

உலகம் பொய் சொல்கிறது என்பதே அந்த உண்மையாகும்.

"அறிவால் மனிதன் உயர்ந்தான்" என்று இவர்கள் எவ்வளவு பகிரங்கமாகப் பொய் பேசுகிறார்கள்.

"விலங்கைவிட மனிதன் உயர்ந்தவனாக இருக்கிறான். ஏனென்றால் அவன் 'பகுத்தறிவு' பெற்றிருக்கிறான்" என்று மேடைகளில் பேசப்படுகிறது

மனிதர்கள் என்ற பொய்யர்களுக்காக ஒரு சில உண்மைகளை வெளியிட நான் முன் வருகிறேன்.

விலங்கை விட நீங்கள் எந்த வகையில் உயர்ந்திருக்கிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

ஒரு சில நடத்தைகளில் நீங்கள் மிருகங்களைப் போலவே இருக்கிறீர்கள். நரியைப்போல ஏமாற்றுவதற்கும் நாகத்தைப் போல நஞ்சு வைப்பதற்கும் உங்களுக்குத் தெரிந்திருக்கிறது.

இன்னும் ஆழமான ஓர் உண்மையை இப்பொழுது நான் சொல்லப் போகிறேன். உங்களைத் தெருவுக்கு இழுக்க வேண்டும் என்பதே எனது மனமார்ந்த ஆசையாகும்!

பசுமாடு தண்ணீர் கலந்த பாலைக் கன்றுக்குக் கொடுத்ததில்லை. ஆனால் பாவிகளே ! நீங்கள் பாலில் தண்ணீர் கலந்து பாதகம் செய்தீர்கள்.

பூனை இருக்கிறதே .. அது தன்னுடைய சமுதாயத்தை முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்கம் என்று கூறு போட்டதில்லை. ஆனால் நீங்களோ வீதிக்கொரு மன்றம் வைத்து உங்களுக்குள்ளே மோதிக் கொண்டீர்கள்.

கழுதை சத்தம் போட நான் இரண்டு காதுகளாலும் கேட்டிருக்கிறேன். ஆனால் அது யாரையும் திட்டி சத்தம் போட்டதை இதுவரை நான் கேட்டதில்லை.

மனிதர்களே ! மனிதர்களே ! நாய் என்கிற மிருகத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? உங்களைப் போல் கன்னம் வைத்துத் திருடும் தீய பழக்கம் அந்த மிருகத்திடமில்லை பதிலாக நீங்கள் எங்கு திருடினாலும் உங்களைக் காட்டிக் கொடுக்கும் அளவுக்கு இன்று அந்த மிருகம் தன்னுடைய தகுதியை உயர்த்திக் கொண்டிருக்கிறது.

புலியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? 'கொடிய விலங்கு' என்று

அந்த மிருகத்தை நீங்கள் அழைக்கலாமா? அறிவாளிகளே! உங்களைப் போல் அந்த மிருகம் தன்னுடைய சகோதரர்களின் மீது எந்தக் காலத்திலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில்லை. கழுகு என்பது பொல்லாத பறவையாக இருக்கலாம். ஆனல் அது அணுக்குண்டுகளைத் தூக்கிக் கொண்டு பறந்ததை நீங்கள் எந்த வானத்திலாவது பார்த்திருக்கிறீர்களா?

மனிதர்களே! ''விலங்குகளையும் பறவைகளையும் விட அறிவால் உயர்ந்து விட்டோம்'' என்று இன்னொரு தடவை சொல்லாதீர்கள். நீங்கள் பொய் சொல்வதாக நான் தெய்வத்தின் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்வேன்.

உங்கள் சார்பாக வாதாட வருகின்ற வழக்கறிஞன் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் என்னுடைய சாட்சிகளிடமிருந்தே நல்ல பதில்களை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

''மனிதர்கள் தெய்வத்துக்குக் கோயில் கட்டியிருக்கிருர்கள் . . அறிவுதான் அதற்குக் காரணம்'' என்று உங்கள் வழக்கறிஞன் தெய்வத்தை வசப்படுத்த முற்படுவான்.

அப்பொழுது முயல் குட்டி ஒன்று தெய்வத்தைப் பார்த்து 'நாங்கள் தெய்வத்துக்குக் கோயில் கட்டியதில்லை என்பது உண்மைதான்... அதே நேரத்தில் நாங்கள் நாத்திகம் பேசியதும் இல்லை' என்று கொஞ்சங் கூட அச்சம் இல்லாமல் பதில் சொல்லப் போகிறது.

''அறிவு இருந்த காரணத்தினுல்தான் 'மருந்து' என்ற அற்புதமான பொருளை மனிதன் கண்டு பிடித்தான்'' என்று உங்கள் வழக்கறிஞன் மூலமாக நீங்கள் பேசுவீர்கள்.

அப்போது, ''ஐயா! மருந்து என்பது ஒரு பெரிய கண்டு பிடிப்பு என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன், ஆனுல் இதோ பாருங்கள் மருத்துவிச்சி இல்லாமலே நான் பதினுறு குட்டிகளைப் பெற்றிருக்கிறேன்'' என்று காட்டுப் பன்றி சாட்சி சொல்லுவதையும் நீங்கள் காணப்போகிறீர்கள்.

மனிதர்களே! மனிதர்களே!

உண்மைக்கும் உங்களுக்கும் எந்தக் காலத்திலும் ஒத்துப் போனதில்லை என்பதை நான் அறிவேன். என்றுலும் உங்களைக் கெஞ்சுதலோடு கேட்டுக் கொள்

கிறேன். . . 'பெரிய பொய்களையாவது' இனிமேல் பேசாதிருப்பீர்களாக!

உங்களிடம் அறிவு இருக்கிறது என்று சொல்லுங்கள். அதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் ''அறிவுதான் மனிதனை உயர்த்தியது'' என்று மட்டும் வாதம் செய்யவராதீர்கள். ஏனென்றால் 'பொய்மை' எந்தக் காலத்திலுமே என்னுடைய உள்ளம் ஜீரணித்ததில்லை.





# கவிஞனும் காதலும்

என்னுடைய 'அவள்' யாரென்று தயவு செய்து யாரும் கேட்டுவிடாதீர்கள்.

எனக்கென்று ஒருத்தி நிச்சயமாக இருக்கிறாள் என்பதை நீங்கள் நம்பினால் அது போதுமானதாகும்.

'காதல்' என்பதை அவள் தான் எனக்குக் கற்றுக்கொடுத்தாள்.

எதை எதையோ பார்த்துக்கொண்டு அலைந்த எனக்குக் காட்டவேண்டிய பொருளைக் காட்டித் தந்தவள் அவள்.

ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று நான் சொல்லிக்கொண்டிருந்தேன்...

ஒன்றும் ஒன்றும் ஒன்றுதான் என்ற புதிய கணக்கை எனக்கு அவள் சொல்லிக் கொடுத்தாள்.

அவளைப் போல எந்த ஆசிரியரையும் இதுவரை நான் பார்த்ததில்லை.

'காதல்' என்பது ஐந்து நிமிடத்துப் பிரச்சனைதான் என்று நான் எண்ணியிருந்தேன். நண்பன் அப்படித்தான் அவனுடைய அனுபவத்தை என்னிடம் கூறியிருந்தான்.

தலையிலுள்ள அழகிய கருங்கூந்தலுக்கும் காலிலுள்ள ரோஜா மொட்டுப் போன்ற பெருவிரலுக்கும் இடையில் இருக்கும் சில வற்றில் 'காதல்' வாழ்கிறது என்பது தான் என்னுடைய பழைய தத்துவம்.

படகோட்டியின் பாடல்

தோளிலே கையைப் போட்டுக் கொண்டால் தோழமை வந்து விடுகிறது என்று கருதும் முட்டாளைப் போலவே—

உடலோடு உடல் ஒட்டிக் கொண்டால் 'உறவு' வந்து விடுகிறது என்று நான் கனவு கண்டு வந்தேன்.

என்னுடைய கனவின் கனவுத் தோற்றத்தைக் கலைத்துவிட்ட தெய்வமாக அவள் வரலாற்றில் இடம் பெறுகிறாள்.

தசைக் கட்டி என்பது வேறு 'காதல்' என்பது வேறு என்ற ஆழமான உண்மையை இப்பொழுது நான் புரிந்து கொண்டிருக்கிறேன்.

தசைக் கட்டிகள்தான் 'காதல்' என்றால் இறைச்சிக் கடையில் காதலை எந்த நேரத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

அவள் என்னுடைய உள்ளத்தில் உண்மையான பல தத்துவங்களை விதைத்து விட்டு அறுவடை செய்கிறாள்.

தட்டாமலே திறக்கப்படுவதற்கும் கேளாமலே கொடுக்கப்படுவதற்கும் 'காதல்' என்று நான் பெயர் வைத்திருக்கிறேன்.

அப்படித்தான் எனக்கு அருகிலே அவள் வந்தாள்.

அழையாமலே வந்த விருந்தாளி அவள்.

பார்க்காமலே என்னைப் பார்த்து... பேசாமலே என்னிடம் பேசி... பழகாமலே என்னுடன் பழகும் அவளை நான் நினைத்துப்பார்க்கிறேன்.

எனக்கு அருகில் இப்பொழுது அவள் இல்லையென்றாலும் எனக்கு அருகிலே தான் இப்பொழுது அவள் இருக்கிறாள்.

என்னுடைய ஒவ்வொரு மூச்சிலும் அவளுடைய பெயர் உச்சரிக்கப்படுகிறது.

உள்ளம் என்பது எங்கே என்பதை இது வரை நான் அறிந்ததில்லை...

ஆனால், அவள் என் உள்ளத்தின் உள்ளே இருக்கிறாள் என்பதை மட்டும் நான் நிச்சயமாக அறிவேன்.

இறைவனுக்கும் எனக்கும் இடையில் அவள் ஏணியாக இருக்கிறாள்.

அவள் நினைத்தால் நான் சிரிக்கவும் முடியும்; அழவும் முடியும்.

சிலர் அவளை மனிதவர்க்கத்தைச் சேர்ந் தவள் என்று சொல்கிறார்கள்.

சொல்பவர்களின் சொல்லையெல்லாம் நான் என்றுமே ஏற்றுக்கொண்டதில்லை.

மனிதன், திருமணம் நிகழும் முதல் இர வைத்தான் 'காதலின்' எல்லை என்று எண்ணிக் கொண்டிருக்கிறான்.

இவளோ 'எல்லை காதலுக்கு இல்லை' என்று வாதம் செய்கிறாள்

வாதம் செய்கிறாளா.....? இல்லை ... .. வேதம் செய்கிறாள்.

தத்துவங்களுக்கெல்லாம் தத்துவமாக அவளை நான் பார்க்கிறேன்.

உலகத்தில் 'இவள்' வாழ்கிறாள் என்று சொல்வதை விட உலகம் இவளுக்குள் வாழ்கிறது என்று சொல்வதே உண்மை யின் வார்த்தைகளாகும்.

'அவள்' என்றும் 'இவள்' என்றும் இரண்டு நாக்குகளால் நான் பேசவில்லை.

ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாமல் நான் எதையோ புலம்பிக் கொண்டிருப் பதாக யாரும் கருதிவிடக் கூடாது

என்னைப் பொறுத்தவரை இலக்கணம் இல்லாத புலம்பல் வார்த்தைகள் உலகத்தில் இரண்டு மனிதர்களுக்கு மட்டுமே சொந்தம் என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன்.

ஒருவனைக் 'காதலன்' என்று சொல்கிறார்கள். அடுத்தவன் பைத்தியக்காரன் என்று அழைக்கப்படுகிறான்.

நீங்கள் என்னை எந்த மனிதனாக நினைத்துக் கொண்டாலும் சரி, 'அவள்' அந்த மனிதனோடு இரண்டறக் கலந்திருக்கிறாள் என்பதை மட்டும் உறுதியாக நம்புங்கள்.

நிலத்துக்கு மேலே நான் அசையும் பொருளாக இருக்கும் போதும் நிலத்துக்குக் கீழே நான் அசையாத பொருளாகி விட்ட பிறகும் 'அவள்' என்னோடு நானாகவே இருப்பாள்.

என்னிலிருந்து அவளைப் பிரிக்கின்ற வல்லமை உலகத்தில் எந்த மூலையிலும் இல்லை என்று உறுதியாகவே கூறுவேன்.

இறைவனுக்கும் எனக்கும் இடையில் எப்படி அவள் ஏணியாக இருக்கிறாளோ

அப்படியே எனக்கும் அவளுக்கும் இடை யில் இறைவன் ஏணியாக இருக்கிறான்

இந்த மூன்று வல்லமைகளின் அதிசய மான கூட்டுறவை உலகில் எந்த சக்தி யும் குலைத்து விடுவதற்கில்லை.

அவளும் நானும் பிறந்த பின்னர் சேர்ந் தோம் என்பது உண்மையாக இருந்தா லும் சேர்வதற்காகப் பிறந்தோம் என்றே வேதம் கூறுகிறது.

எங்கள் உறவு மண்ணில் பிறந்த தென் றும் சாதாரணமான வருணனைகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறதென்றும் தவறாக எடை போட்டு விடாதீர்கள்...

வருணனைகளையும் வார்த்தைகளையும் கடந்தவள் அவள்!

என்னுடைய கவிதைகளில் பல தடவை அவள் வந்திருக்கிறாள் என்றாலும் 'முழு மையான' அவளை எந்தக் கவிதையிலும் என்னால் வைக்க முடிந்ததில்லை.

'எல்லையின் எல்லை' அவள்!

இவ்வளவு நேரமும் அவளைப் பற்றி நான் சொல்லிக் கொண்டு வருவதெல்


லாம் 'அவளுக்கு' வடிவம் தர நான் எடுக்கும் முயற்சிகளே தவிர வடிவம் ஆகிவிடாது. நான் மிகுந்த வேதனை யோடு என்னுடைய தோல்வியை ஒப் புக் கொள்கிறேன்.

அருமை நண்பர்களே!

உங்களிடம் விடைபெறுமுன் மீண்டும் ஒருமுறை நான் பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் இதுதான்.

என்னுடைய 'அவள்' யாரென்று தயவு செய்து யாரும் கேட்டுவிடாதீர்கள்.

எனக்கென்று ஒருத்தி நிச்சயமாக இருக் கிறுள் என்பதை நீங்கள் நம்பினுல் அது போதுமானதாகும்...





# கவிஞனும் வறுமையும்

வறுமையின் கால்களில் விழுந்து நான்
வணங்க வேண்டும்.

என்னைக் கவிஞனாக்கிய அந்தமேதைக்கு
நான் ஒவ்வொரு நிமிடமும் கடமைப்
பட்டிருக்கிறேன்

பசியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ஒரு தடவை பசிக்கிறது என்றால் சாப்பிடுவதற்கு சோம்பலாக இருக்கிறது என்று பொருள்.

இரண்டு தடவைகள் பசியெடுத்தால் சாப்பிட இன்னும் நேரம் கிடைக்கவில்லை என்று பொருள்.

மூன்றாவது தடவையும் பசித்தால் அதற்கு வறுமை என்று பொருள்.

நான் மூன்று தடவைகளும் பசியால் மகிழ்ச்சியடையும் வர்க்கத்தைச் சேர்ந்தவன்.

பசி, பசி என்று மக்கள் துன்பத்தில் தவிப்பதாக இங்குள்ள அறிஞர்களெல்லாம் பேசிக்கொள்வதை நான் அறிவேன்.

ஆனால்......

பசிக்கும் போது இருக்கும் மகிழ்ச்சியை சாப்பிடும் போது என்னால் அனுபவிக்க முடியவில்லை...

ஆசையால் அவதிப்படும் போது ஏற்படும் இன்பம், ஆசையை அனுபவிக்கும் போது கிடைப்பதில்லை.

பசி என்பது பேரின்பம் என்றே நான் கூறுவேன்.

எப்பொழுதெல்லாம் பசி என் தொண்டைக்கு வந்துவிடுகிறதோ அப்பொழுதெல்லாம் பேனா என் விரல்களுக்கு வந்து விடுகிறது.

உலகில் இரண்டு தத்துவ ஞானிகள் இருக்கிறார்கள் என்பது என்னுடைய முடிந்த முடிவாகும்.

ஒருவனை ஏழை யென்றும் அடுத்தவனை நோயாளி என்றும் அழைக்கலாம்.

இந்த இரண்டு வகைகளில் எந்த வகையை எடுத்துக் கொண்டாலும் சரி நான் உலகின் மாபெரும் தத்துவ ஞானி என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள்.

கண்ட கண்ட பேர்வழிகளெல்லாம் இப்போது தத்துவம் பற்றிப் பேசுவதாக வதந்தி.

பளபளப்பான காரில் வந்து இறங்கி மேடையில் மளமளவென்று தத்துவம்

பேசிவிட்டுப் போகும் இப் பெரிய மணி தர்களை நான் பார்த்திருக்கிறேன்.

இது என்ன கொடுமை !

சட்டையின் இரண்டு பைகளையும் காசுத் தாள்களால் நிரப்பிக் கொண்டிருப்பவனுக்கும் தத்துவத்துக்கும் என்ன சம்பந்தம்?

கண்ணீர் விடாத மனிதனுக்குத் தத்துவத்தைப் பற்றிப் பேச என்ன யோக்கியதை இருக்கிறது?

அழுகையின் குழந்தையான என்னிடம் தத்துவத்தைப் பற்றிப் பேசுங்கள்.

வறுமை என் கண்களிலிருந்து நீரை இறைக்கும் போது அந்த நீரோட்டத்தை மலையின் அருவியோடு ஒப்பிட்டு மகிழும் என்னிடமல்லவா நீங்கள் தத்துவம் பேச வரவேண்டும்?

நான் துயரத்தால் அழுகிறேன் என்பது உண்மைதான்.

ஆனால் அதே நேரத்தில்... அழுவதால் தான் மகிழ்ச்சியடைகிறேன் என்பதையும் புரிந்து கொள்வீர்களாக!

அழுவது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா?

உடலின் எந்தப் பகுதியில் இருந்து நீர் வெளிப்பட்டாலும் அப்போது ஒரு மகிழ்ச்சி ஏற்பட வேண்டும் என்பது இறைவனின் நியதி.

தாய் குழந்தைக்குப் பால் கொடுக்கும் போது எத்தனை மகிழ்ச்சி அடைகிறாள். புண்ணில் இருந்து சீழ் வெளியே வரும் போது உங்களுக்குக் கிளுகிளுப்பாக இல்லையா?

வறுமையில் கிடந்து நான் அழுது வடிக்கும் ஒவ்வொரு நிமிடமும் இன்பம் என்ற ஒன்றை நான் முழுமையாக அனுபவிக்கிறேன்.

துன்பங்களோடு நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேனே தவிர அந்தத் துன்பங்களுக்காக நான் என்றுமே கவலைப்பட்டதில்லை.

இந்த உலகத்தில் என்னை அக்கறையோடு நினைத்துப் பார்ப்பவர்கள் நாலைந்து பேர்களே.

நான் ஒரு நாள் திடீரென்று தும்மிய போது உன்னை உன் தாய் நினைத்துப்

பார்க்கிறாள் என்று பக்கத்தில் இருந்த நண்பர்கள் சொன்னார்கள்

அவர்களில் ஒருவன் எழுந்தான்.

இல்லை—பாசத்தின் வடிவமாக இருக்கும் உன் அண்ணன் இருக்கிறாரல்லவா? அவர் தான் உன்னை நினைத்திருப்பார் என்று கூறிவிட்டு உட்கார்ந்தான்.

மீண்டும் ஒரு குரல் கேட்டது—

எல்லோரும் அவனுடைய [illegible]தலியை மறந்து விட்டீர்களே... அவள் மட்டும் ஏன் நினைத்திருக்கக் கூடாது?

பைத்தியக்காரர்களின் இந்த மோதலைப் பார்த்து நான் சிரித்தேன்.

என்னுடைய ஒரு தும்மலுக்கு இவர்கள் ஆயிரம் ஆராய்ச்சி நடத்துகிறார்களே... அவர்களைப் பார்த்து நான் சொன்னேன்

என் அன்பு நண்பர்களே!

இந்த உலகத்தில் என்னை அடிக்கடி நினைத்துப் பார்ப்பவன் ஒருவன் இருக்கிறான் என்பதைக் கண்டு பிடிப்பதில் நீங்கள் தோற்றுப்போனீர்கள்.

நான் சொன்ன பின்பாவது தெரிந்து கொள்ளுங்கள்—அவன் பெயர் கடன் காரன். நண்பர்கள் சிரித்தார்கள்

அவர்களுக்கெல்லாம் இப்பொழுது நான் விளையாட்டுப் பொருளாகி விட்டேன்

என்னுடைய வறுமை அவர்களையும் சிரிக்க வைக்கிறது என்பது எனக்குப் பெருமையே!

என் துனபங்கள் உலகத்தை வாழ்விப் பதாக !

காய்ந்து போன செடிகளை எருவாக இட்டு மலர்ந்து நிற்கும் பூந்தோட்டத்தை வளர்ப்பதுபோலவே—

புழுத்துப் போன என்னுடைய வாழ்க் கையின் மேல் இந்தப் பூமி வளர்ச்சிய டையுமானல் உண்மையிலேயே நான் கொடுத்து வைத்தவன் என்பேன்.

கடவுள் ஏன் ஏழ்மையைப் படைத்தான் என்பதுஇப்பொழுது எனக்குப் புரிகிறது. வறுமை இல்லை என்ருல் இந்த உலகம் நாறிப்போயிருக்கும்.

வேட்டியும் சேலையும் கட்டி வேளைக்கு வேளை வயிற்றை நிரப்பிக் கொண்டிருப்

பவர்கள்தான் உலகம் என்ருல் இந்த உலகத்துக்கு என்ன மதிப்பு இருக்கிறது?

தாயினுடைய வயிற்றில் உருவாகி...

தங்களுடைய வயிற்றைப் பார்த்துக் கொண்டே வாழ்ந்து... முடிவில் தரையினுடைய வயிற்றிலே சமாதியாகிவிடும் இந்த வயிற்றுப் பிறவிகளில் இருந்து என்னை அப்புறப்படுத்துவதற்காகவே இறைவன் ஏழ்மை என்ற வேலியை எழுப்பியிருக்கிருன்.

வேலிக்கு இந்தப் புறத்திலேதான் உலகம் இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

என்னுடைய உலகத்தில் நான் ஒவ்வொரு நிமிடமும் செத்துக் கொண்டிருக்கிறேன் என்பது உண்மையே.

ஆனல்...

வாழும் போது செத்துக் கொண்டிருப்பவர்கள் செத்த பின்பு வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?

★



# கவிஞனும் நோயும்

நண்பர்களே! நண்பர்களே!

நான் ஒரு கவிஞன் என்பதால் நோயா ளியாகவும் இருக்கிறேன்.

எவனுடைய வலது கையில் பேனாவும், இடது கையில் மருந்துக் கிண்ணமும் இருக்கிறதோ அவனுக்குக் "கவிஞன்" என்று பெயர்.

அவனுடைய வீட்டில் ஒவ்வொரு நிமிடமும் முனகல் சத்தம் கேட்க வேண்டும் என்று எழுதி வைக்கப்பட்டிருக்கிறது.

நண்பர்களே! ஆண்டவனின் எழுத்து என்னுடைய வீட்டில் அமுலாக்கப்படுவதை நீங்கள் கண்டு கொள்வீர்களாக!

என்னுடைய கட்டிலுக்குப் பக்கத்தில் எப்பொழுதும் மருத்துவனுடைய நாற்காலி இருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள்.

மருத்துவர்கள் என்ற மனிதர்கள் எனக்காக மிகவும் அனுதாபப்படுவதை நான் உணருகிறேன்.

என்னைப் பொறுத்தவரை அனுதாபத்துக்கு உரியவர்கள் மருத்துவர்களே தவிர நோயாளிகள் அல்ல என்றே நான் சொல்லுவேன்.

சாவிலிருந்து உயிர்களைக் காப்பாற்றுவதாக இந்த மருந்துவர்கள் சொல்கிறார்

களே... இவர்களைத் தவிர வேறு யாருக்கு அனுதாபம் செலுத்துவது?

உலகத்தில் இதுவரை எந்த வைத்திய ஞவது சிரஞ்சீவியாக இருந்திருக்கிருஞ?

மருந்தைக் கண்டு பிடித்தவனே செத்துப் போஞன்... ஊசியைப் போடவருகிறவன் என்னைக் காப்பாற்றப் போவதாகக் கூறுகிருனே.

என்ன செய்வது? மருத்துவனைப் பிரிந்தால் நோயாளி தூங்க முடியாது— நோயாளியைப் பிரிந்தால் மருத்துவன் தொழில் பார்க்க முடியாது

கட்டிலில் இருந்து கொண்டே நான் சிரிக்கிறேன்....

வீட்டுக்கு உள்ளேயும் இருக்காமல் வெளியிலும் வராமல் வாசலில் நின்று நான் வேடிக்கை பார்க்கிறேன்.

வாழ்வின் கூடாரத்திலும் என்ஞல் தங்க முடியவில்லை... சாவின் ஏகாந்தத்திற்கும் என்ஞல் போக முடியவில்லை.

என் அன்பு நண்பர்களே!

இந்த நோயாளியின் வாழ்க்கை எவ்வளவு இன்பமானது என்பதை நீங்கள் யாருமே அறியமாட்டீர்கள்....

என்னுடைய மெலிந்து போன உடலைப் பார்த்து அழுவதற்கு மட்டும் கற்றுக் கொண்ட கோழைகளாக நீங்கள் இருக்கிறீர்கள்.

உங்களுக்குத் தெரியுமா...? எவனுடைய உடல் நோயினால் மெலிந்து கொண்டே போகின்றதோ, அவனு[illegible] உள்ளம் தத்துவத்தினால் பருத்துக் கொண்டே வரவேண்டும் என்று இறைவன் கட்டளையிட்டிருக்கிறான்.

நோய் வருவது மனிதனுடைய உள்ளத்தை வருத்துவதற்காக என்று நீங்கள் சொல்லிக் கொண்டாலும், நோய் வருவது மனிதனுடைய உள்ளத்தை வளப்படுத்துவதற்காக என்றே நான் வாதாடுவேன்.

நோய் வருகின்றவரை மனிதன் கடவுளிடம் இருப்பதை விட தன்னிடம் அதிகம் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறான்.

படகோட்டியின் பாடல்

மருத்துவ மனைக்குப் போய் வந்த பின்பு ஞானியாகியவர்கள் உலகத்தில் நிறைய இருக்கிறார்கள்.

நண்பர்களே! நண்பர்களே!!

என் உடலிலுள்ள இரத்தமெல்லாம் வாயினால் வெளியே வரும் அளவுக்கு நான் பயங்கரமான நோயை அனுபவித்திருக்கிறேன்.

வெளியிலே உள்ள மருந்துகளெல்லாம் என் வாயினுள்ளே செல்லும் அளவுக்கு நான் மரணப்படுக்கையில் கிடந்திருக்கிறேன்.

இப்பொழுது என்னுடைய உடலை நீங்கள் பரிசோதித்துப் பார்ப்பீர்களானால் அதன் பாதிப்பகுதி இரத்தத்தினாலும் மீதிப்பகுதி மருந்தினாலும் நிரப்பப்பட்டிருப்பதைக் கண்டு கொள்வீர்கள்.

என் அன்பு நண்பர்களே!

உலகத்தின் மாபெரும் ஞானிகளை நினைத்துப் பார்க்கும் போதெல்லாம் என்னையும் நீங்கள் ஒரு தடவை நினைத்துக் கொள்வீர்களாக!

நோயைப் போல் சிறந்த மருந்து வேறு எதுவுமில்லை என்று உங்களிடம் நான் சொல்லி வைக்கிறேன். நீங்கள் உங்களை வெறும் எலும்பும் சதையும் என்றே எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்.

இவற்றிற்கெல்லாம் மேலான ஒன்று தான் நீங்கள் என்பதை நீங்களே மறந்து போனீர்கள்!

நண்பர்களே! நான் சொல்லும் அந்த மேலான ஒன்று அழுகிப்போகாமல் நோய் என்ற ஒன்று தான் உங்களைக் காப்பாற்றுகிறது என்பதை இன்றாவது தெரிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் குழந்தையாய் இருந்த பொழுது எந்த உள்ளம் உங்களிடம் இருந்ததோ அந்த உள்ளம் நோய் வந்த பின்பு மீண்டும் உங்களிடம் வந்து சேர்ந்து விடுகிறது.

எப்போது நீங்கள் கட்டிலுக்குப் போகிறீர்களோ, அப்போதே நீங்கள் தொட்டிலுக்குப் போனவர்கள் ஆகிறீர்கள்.

பாவம் என்பது குழந்தைக்குத் தெரிவதில்லை... அதனால் அது பாவம் செய்வதில்லை பாவம் என்பதை நோயாளி

தெரிந்து கொள்கிறான். அதனால் அவன் பாவத்தை நினைத்துப் பார்ப்பதில்லை.

மொத்தத்தில், தண்டனைக்குத் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு இருக்குமானால், என் அன்பு நண்பர்களே! ஒன்றில் காலமெல்லாம் குழந்தைகளாக இருப்பதற்கு முயற்சி செய்யுங்கள். இல்லையென்றால் நோயாளிகளாக மாறி எனக்குப் பக்கத்தில் வந்துபடுத்துக் கொள்ளுங்கள்.

ஒரு நாட்டில் எவ்வளவு அதிகமான நோயாளிகள் இருக்கிறார்களோ— அவ்வளவும் அந்த நாட்டின் நன்மைக்காக என்றே நான் சொல்லுவேன்.

நண்பர்களே ! நண்பர்களே!!


என்னுடைய சொற்களையெல்லாம் நோயாளி ஒருவனின் புலம்பல் என்று நீங்கள் தப்புக் கணக்குப் போடுவீர்களானால் உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்கிறவர்களாவீர்கள்.

தத்துவம் என்பது எல்லா மனிதர்களுக்கும் சுவையாக இருக்கும் என்று ஒரு நாளும் நான் சொல்லமாட்டேன்.

ஆனால்......

சுவையாக இருந்தாலும், அருவருப்பாக இருந்தாலும் தத்துவத்தில் இருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ள முடியாது என்பதை மட்டும் நினைவில் இருத்துவீர்களாக!

''நோய்'' என்பது ஒரு தெய்வீகத் தன்மை என்பதை நீங்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.



7



## கவிஞனும் சாவும்

இந்த உலகத்தை நான் மிகவும் நேசிக்கிறேன்.

மனிதன் என்ற ஒருவனை மட்டும் இந்த உலகத்தில் இருந்து அப்புறப்படுத்தி விட்

டால் இந்த உலகத்துக்கு ஈடாக எந்த சுவர்க்கமும் இல்லை என்று கூறுவேன்.

காதலும் நோயும், வறுமையும் கவிதையும் இருக்கின்ற இந்த உலகம் எவ்வளவு இன்பமயமானது தெரியுமா?

என்னுடைய நண்பர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் காதலர்களாகவோ அல்லது வறுமையிலும் நோயிலும் இன்பம் காண்பவர்களாகவோ இருக்கிறார்கள்......

அவர்களும் மிகவும் நல்லவர்கள்!

என்னைப் பொறுத்தவரை எனது நண்பர்கள் நிச்சயமாக மனிதர்களே அல்ல அவர்கள் ஓரளவு எனக்குப் பக்கத்தில் உட்காருவதற்குத் தகுதி பெற்றிருக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நான் இந்த அழகான உலகத்தையும் என்னுடைய அருமையான நண்பர்களையும் பிரிந்து செல்வதற்கு ஒரு நாளும் விரும்ப மாட்டேன்.

உணர்ச்சிவசப்படும் போதெல்லாம் இந்த உலகத்தை அடிக்கடி நான் சபீத்துக் கொண்டாலும் இந்த உலகத்தில்

எனக்குள்ள பற்று தனித்தன்மை வாய்ந்ததாகும். சில வேளைகளில் ஆண்டவனிடம் சென்று விட வேண்டும் என்ற ஆசை எனக்கு ஏற்படுகிறது... அடுத்த நிமிடமே இந்த உலகத்தில் இல்லாத ஆண்டவன் வேறு எங்கே இருக்கப் போகிருன் என்று நான் மயங்கிப்போகிறேன்.

நான் இந்த உலகத்தை மிகவும் நேசிக்கிறேன். ஆனு காலதேவனே அடிக்கடி என்னைப் பார்த்து ''இந்த உலகம் உன்னுடைய நிரந்தர வீடல்லவே'' என்று சொல்லிக்கொண்டிருக்கிருன்.

வாடகை வீட்டில் நான் குடியிருக்கிறேன் என்ற உண்மையை மனப்பூர்வமாக நான் ஒப்புக்கொள்கிறேன்.

வீட்டுக்காரன் வெளியே போகச் சொல்லும் போது நான் மரியாதையாக வெளியே போயாக வேண்டும்.

சாவு என்பதும் வீட்டைக் காலி செய்வது என்பதும் ஒன்று தான் என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்களாக!

மரணம் என்ற புரியாத புதிரைப் பற்றிய சில உண்மைகளை இப்போது நான் உங்களிடம் சொல்லப்போகிறேன்.

அனுபவியாத ஒன்றைப்பற்றி எது சொன்னாலும் அது பொய்யாகவே கருதப்படும். ஆனால்.... கணக்குப் போடுவதில் நான் கெட்டிக்காரன் என்றும் என்னுடைய கணக்கு மிகவும் சரியாக இருக்கும் என்றும் உங்களுக்கு நான் உறுதி கூறுகிறேன்.

மரணம் என்பது மனிதர்களை அழித்து விடுகிறது என்பது உண்மையே!

நான் திரும்பவும் திரும்பவும் சொல்லி வருவது போல் வெறும் எலும்பும் சதையுந்தான் மனிதன் என்று நினைத்துக் கொண்டிருக்கும் மனிதப் பிறவிகள் இந்த மரணத்தினால் அழிந்து விடுவது குறித்து உலகில் அளவுகடந்த மகிழ்ச்சியை நான் அனுபவிக்கிறேன்.

ஆனால்......

எலும்புக்கும் சதைக்கும் அப்பாற்பட்ட உயிர்கள் என்ற வல்லமைகள் எந்தக் காலத்திலும் அழிவதில்லை என்பதே எனது கருத்தாகும்.

மரணத்தின் போது தசைக்கூடு என்ற அழுக்கு நிறைந்த சிறைச்சாலையில் இருந்து புனிதமான உயிர் விடுதலை பெற்று வெளியேறுகிறது.

மனிதன் கண்ணாடியில் தன்னுடைய உடலைப்பார்க்கும் போதெல்லாம் அது தான் 'தான்' என்று நினைத்துக் கொள்கிறான்.

இந்த ஒரு தவறு காரணமாகவே அவன் கெட்டவனாகவும், எனக்கு எதிரியாகவும் ஆகிவிட்டான்.

மனிதன் எவ்வளவுதான் கூடாதவனாக இருந்தாலும் அவனுடைய உயிரை நான் ஒரு நாளும் வெறுக்க மாட்டேன் ஏனென்றால் உயிர்கள் என்றுமே பாவம் செய்வதில்லை—உயிர்கள் என்றுமே அழிவதில்லை !

உயிர்களைச் சுமந்துள்ள கூடு சீழினாலும் அழுக்கினாலும் நிரப்பப்பட்டிருக்கிறது. உடலின் அசுத்தம் உயிரையும் கெடுத்து விடுகிறது.

நான் கவிஞனாக இருப்பதால் நாற்றம் வீசும் இந்த அழுக்குக் கூண்டிலும் மூச்சைப்பிடித்துக் கொண்டு என்னுடைய உயிர் கெட்டுப்போகாமல் பாதுகாத்து வைத்திருக்கிறேன்.

சதை வாழ்க்கை வாழ்ந்த மனிதன் சாவு வரும் போது அழிந்துவிடுகிறான் என்பது உங்கள் அகராதிப்படி உண்மையாகவே இருக்கலாம்......

ஆனால்.......

என்னைப் பொறுத்தவரை மரணத்தின் பின்பு நான் உங்கள் உலகத்தில் இருந்து மறைந்தவனாக இருப்பேனே தவிர அப்போதும் வேறு எங்கேயாவது ஓர் இடத்தில் நான் வாழ்ந்து கொண்டுதான் இருப்பேன்.

அப்பொழுது அங்குள்ள ஏனைய உயிர்களை யெல்லாம் பார்த்து நான் சொல்லுவேன்:—

''என் நண்பர்களே!'' பாம்பு தின்னும் ஊருக்குப் போனீர்கள் என்ற காரணத்திற்காக நீங்களும் பாம்பைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தீர்கள்.

''நாற்றம் பிடித்த சதைக் கூட்டிற்குள் நுழைந்தீர்கள் என்பதற்காக உங்களையும் நீங்களே நாறவைத்துக் கொண்டீர்கள்''.

''பார்த்தீர்களா...... பார்த்தீர்களா...... பாம்பு தின்னும் ஊரிலும் பச்சிலை தின்று வாழலாம் என்பதை நான் நிரூபித்து விட்டு வந்திருக்கிறேன்.''

இப்படியாகச் சொல்லிவிட்டு அந்த உயிர்களையெல்லாம் பார்த்து நான் சிரித்துக் கொட்டுவேன்.

எந்த உயிரும் சாவினால் அழிவதில்லை என்று நான் பொதுவாகச் சொல்லிக் கொண்டாலும் சாவின் பின் தலை நிமிர்ந்து நடக்கக் கூடிய உயிர் என்னிடத்திலேதான் இருக்கிறது.

இந்த மகத்தான நிலை எனக்கு மட்டுமே உண்டு என்பதை நினைக்கும் போதெல்லாம் நான் அளவு கடந்த பெருமை அடைகிறேன்.

''உயிர்கள் அழிவதில்லை என்பதற்கு நீ என்ன காரணம் சொல்லுகிறாய்?'' என்று என்னுடைய நண்பன் ஒரு தடவை என்னிடம் கேட்டிருக்கிறான்.

அப்போது நான் அவனிடம் கூறிய வார்த்தைகள் இன்னும் என் நினைவில் இருக்கின்றன.

''சாதாரணமான களிமண்ணாலும் சுண்ணாம்பினாலும் நாம் அமைத்த நமது வீட்டை இடித்து விழுத்துவதற்கே நாம் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டோம் அல்லவா?'' என்று நண்பனைப் பார்த்து நான் கேட்டேன்.

அவன் மிகவும் சாதுவானவன் ஆகவே மௌனமாக உட்கார்ந்திருந்தான். என்

அருமையான நண்பனைப் பார்த்து நான் தொடர்ந்து சொன்னேன்—

"களிமண் வீட்டை இடிப்பதற்கே நமக்கு மனம் வரவில்லையென்றால் அற்புதமான உயிர்களைப்படைத்த இறைவன் எப்படி அவனுடைய கைகளாலேயே அந்த உயிர்களை அபகரித்துக் கொள்வான்?"

என்னுடைய நண்பன் உண்மை புரிந்தவனாக வீட்டுக்குப் போனான்.

நான் திரும்பவும்... திரும்பவும் சொல்கிறேன். உயிர்கள் அழிவதில்லை என்பதை நீங்கள் அனைவரும் முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

எவனாவது இனிமேல் இறைவனுக்கு மூன்று தொழில்கள் என்று சொல்வானானால் அந்த மனிதனுக்கு உங்களிடமிருந்து நல்ல பதில்கள் கிடைப்பதாக!

இறைவன் என்ற வல்லமைக்கும், அழித்தல் என்ற தொழிலுக்கும் எந்தச் சம்மந்தமும் இல்லை என்று அந்த மனிதனிடம் நீங்கள் சொல்லி வையுங்கள்.

நான் இப்பொழுது என்னுடைய தத்துவத்தின் முடிவுக்கு வந்துவிட்டேன்

என்பது என்னுடைய உறுதியான நம் பிக்கை. ஆனால்......


இந்த அழகான உலகத்தை விட்டுப் போய்விட வேண்டுமே என்பதற்காக மட்டும் நான் மிகவும் வருந்துகிறேன்.

இறைவனிடம் என்னுடைய கவலையை ஒப்படைப்பதைத் தவிர வேறு வழிகள் இருப்பதாக இப்பொழுது எனக்குத் தெரியவில்லை.

எல்லாம் வல்ல இறைவனுடைய கால் களைப் பிடித்துக்கொண்டு நான் கெஞ் சுவேன்:—

''இறைவா! உலகத்திலிருந்து நான் பிரி கின்ற சந்தர்ப்பத்தில் என்னுடைய உள் ளத்துக்கும் போதிய அளவு வலிமை யைத்தா! 'பிரிவு' என்ற வேதனையை நான் எப்படியாவது சமாளித்தாக வேண்டும்.





## கவிஞனும் கடவுளும்

நான் இறந்து விட்டேன்

தெய்வத்தின் அற்புதமான பொன் மாளிகைக்கு என்னை அழைத்துச் செல்கிறார்கள்.

இறைவன் என்னை நன்றாக அளந்து வைத்திருக்கிறான். அவனுக்குப் பக்கத்தில் உள்ள நாற்காலி எனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது.

பூமியில் நான் எப்படி வாழ்ந்தேன் என்பதை இறைவன் அங்குள்ள நல்ல மனிதர்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

அதோ வருகிறானே கவிஞன்... அவன் மிகவும் நல்லவன். அவனுடைய உலக வாழ்க்கை மிகவும் அதிசயமானது.

பூமியிலுள்ள மனிதர்களெல்லாம் ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்த நேரத்தில் இவன் மட்டும் இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தான்.

எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. இவன் பூமியில் இருந்த கடைசி நாள் வரை உணர்ச்சி என்ற ஒன்றைத் தவிர வேறு எதற்குமே கட்டுப் பட்டதில்லை. யாருக்குமே அடிமையாகியதில்லை.

பெரிய மனிதர்களை இவன் ஒரு நாளும் கௌரவித்திருக்க மாட்டான். சிறிய மனிதர்களை இவன் அலட்சியப்படுத்தியதாகவும் சரித்திரம் இல்லை.

தன்னுடைய கழுத்துக்குத் தானே மாலை வாங்கிக் கொடுக்கிறவன்தான் பூமியில் இப்பொழுது பெரிய மனிதனுகக் கருதப் படுகிருன் என்பதை நானும் அறிவேன் ......நன்ருக அறிவேன்!

அந்த உலகத்தில் பணமிருக்கிற முட்டாள் இரண்டு நாட்களில் மக்களின் அபிமானத்துக்குரிய தலைவனுகி விடுவதையும் பணமில்லாத அறிவாளி இருபது வருடங்களாக தெருவில் நின்று கொண்டிருப்பதையும் நான் கவனித்து வருகிறேன்.

இதோ! நீங்கள் பார்க்கும் இந்தக் கவிஞன் இருக்கிருனே – இவன் போலித் தன்மை வாய்ந்த பெரிய மனிதனுகவும் வாழவில்லை. ஏமாந்த அறிவாளியாகவும் இருக்கவில்லை!

மனிதர்களில் இந்த மனிதன் மட்டும் ஒரு அதிசயப் பொருளாக இருந்தான். ஒவ்வொரு நாளும் இவனுடைய பாடல் பூவுலகத்தில் மிகவும் இனிமையாக ஒலித்துக்கொண்டிருந்தது.

அடுத்தவர்கள் தன்னைப் பாராட்டவேண்டும் என்று இவன் என்றைக்குமே நினைத்ததில்லை. பாராட்டுதல் என்பது

விலைக்கு வாங்கப்படுவது என்பதையும் அதற்கு மதிப்பில்லை என்பதையும் இவன் நன்கு அறிவான்.

உலகத்திலுள்ள பெரிய மனிதர்களெல்லாம் புதன்கிழமை மக்களால் பாராட்டப்படுவதையும் வியாழக்கிழமை அதே மக்களால் தூற்றப்படுவதையும் இவன் தன்னுடைய அனுபவத்தில் நன்கு கண்டுகொண்டிருக்கிறான்.

இந்த மனிதன் விசித்திரமானவன் — உலகத்தில் இவன் புகழைவிரும்பியதில்லை—பொருளை விரும்பியதில்லை — சுகத்தை விரும்பியதில்லை — உணவை விரும்பியதில்லை—ஆனால் வாழ்வை விரும்பி இருக்கிறான்.

இவனை எப்படி வாழ வைப்பது என்று தெரியாமல் நானே பல தடவைகள் திணறிப் போயிருக்கிறேன்.

கள்ளங் கபடம் என்பதற்கும் இவனுக்கும் எந்த சம்பந்தமுமே இல்லை. நெருப்பு அழகாக இருந்தால் அதைக் கட்டித் தழுவிக் கொள்வதற்கும், வேங்கை கவர்ச்சியாக இருந்தால் அதை அணைத்து முத்தமிடுவதற்கும் இவன் தயாராக இருந்தான்.

நான் ஒன்று சொல்லட்டுமா? பூமியில் எனக்கு இரண்டே இரண்டு கோயில்கள்தான் இருக்கின்றன. ஒரு கோயில் 'குழந்தை' என்று அழைக்கப்படுகிறது அடுத்த கோயிலுக்கு 'கவிஞன்' என்று பெயர்.

இறைவன் தன்னுடைய நீண்ட பிரசங்கத்தை முடித்து விட்டு பக்கத்தில் இருந்த அழகான வெள்ளி நாற்காலியை எனக்குக் காட்டுகிருன்.

நான் உட்கார வேண்டும் [illegible] கோரணையில் தெய்வத்தின் கண்கள் சைகை செய்கின்றன.

பூமியில் இருக்கும் போது எந்த இன்பம் வேண்டும் என்று நான் துடித்தேனே அதே இன்பத்தின் உச்சாணிக் கொம்பில் நான் உட்காருகிறேன்.

ஆண்டவனே! கோயில் இருக்கும் இடத்துக்குத் தெய்வம் வருகின்ற நிலை மாறி தெய்வத்தைத் தேடிக்கொண்டு கோயில் வந்திருக்கிறது.

என்னுடைய பேச்சின் துவக்கத்திலேயே ஆண்டவன் 'கொல்'லென்று சிரித்துக் கொட்டுகிருன்! நான் அளவு கடந்த

மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடிக்கப் படு கிறேன்...

மனிதனைச் சிரிக்க வைத்த காலம் போய் தெய்வத்தைக் கூட நான் சிரிக்க வைக்கிறேனு?

என்னுடைய வாய் பழையபடி பூமியில் நான் எந்தப் பாடலைப் பாடிக்கொண் டிருந்தேனே... அதே பாடலைப் பாடத் தொடங்குகின்றது.

இறைவா !

வல்லமையின் வல்லமையாக இருக்கின்ற உன்னை நான் வணங்குகின்றேன்.

எவ்வளவு அழகாக உலகத்தை நீ ஆக்கி வைத்திருக்கிருய்.

உலகத்தை மனிதன் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு உலகத்தை நீ குழப்பிவைத்திருக்கிருய்......

அந்தக் குழப்பத்திலேதான் உன்னை ஒப் புக்கொள்கிறது.

சில வேளைகளில் உலகத்துக்கு ஒன்றும் விளங்கவில்லை. அந்த வேளைகளில் நீ இருப்பது விளங்குகிறது.

நான் மனிதர்களைச் சபித்துக் கொண்டிருந்தாலும் உன்னுடைய படைப்பின் அற்புதத்தை ரசித்துக் கொண்டு தான் இருந்தேன் இருக்கிறேன்.

என்னுடைய பழைய பாடல் நீண்டு நிமிர்ந்து செல்கிறது.

இறைவன் என்னைப்பார்த்துப் புன்முறுவல் பூக்கிறான்.

'இவ்வளவு அழகாக நீ உண்மையைப் புரிந்து கொண்டிருக்கிறாயே......இப்படி வாழ உனக்கு வழி காட்டியவர் யார்?' என்று என்னைப்பார்த்து அவன் கேட்கிறான்.

'தெய்வமே! எனக்கு வழிகாட்டி இறைவன்தான் என்று நான் ஒருநாளும் சொல்லமாட்டேன்.

கவிஞனுக்குத் தெய்வந்தான் வழிகாட்ட வேண்டும் என்ற அவசியம் ஒன்றும் இல்லை.

கவிஞன் தெய்வீகத் தன்மைகளோடு படைக்கப்பட்டவன். அவனுக்கு வழிகாட்டும் தகுதியை அவனே பெற்றிருக்கிறான்.

## படகோட்டியின் பாடல்

தன்னந்தனியனாகக் கடலில் போகும் படகோட்டிக்கு யார் வழிகாட்டுகிறார்கள்....? அவனுக்கு அவனைத் தவிர வேறு யாரும் துணை செய்வதில்லை.

கலங்கரை விளக்கம் இல்லாத ஊரிலும் அவன் கரையைக் கண்டுபிடித்திருக்கிறான். காற்றையும் புயலையும் சமாளித்துக் கொண்டு அவன் பயணம் செய்திருக்கிறான்.

ஆண்டவனே! என்னைப் பொறுத்தவரை நான் ஒரு படகோட்டி! [illegible]க்கு வழி[illegible]டி!

தெய்வத்தின் இரண்டு கைகளும் என்னை அணைத்துக் கொள்கின்றன. நான் தெய்வ மண்டலத்தின் நிரந்தர குடிமகன் ஆக்கப்படுகிறேன்.

அதோ பூந்தோட்டம் தெரிகிறது!

ஆண்டவன் மாளிகைக்குப் பக்கத்தில் அழகான சின்னஞ் சிறிய குடிசை

கவிஞன் அங்கேதான் குடியிருக்கப்போகிறான்

*



## கவிஞனும் நரகமும்

நரகத்தின் சாளரம் திறக்கப்பட்டது.

காவலன் என்னைப் பார்த்துச் சொன்னான், இதோ நீ கீழே பார்க்கிறாயே ......இதற்குத்தான் 'நரகம்' என்று

பெயர் பாவம் செய்தவர்கள் இங்கே அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

எவனெவன் பாவம் செய்தவன் என்பது பற்றி இறைவன் இலக்கணம் எழுதி வைத்திருக்கிறான். பூமியிலுள்ளவர்கள் 'பாவம்' என்பதற்கு இன்னும் சரியான பொருளைத் தெரிந்து கொள்ளவில்லை. பாவம்...... அவர்கள் ஒவ்வொரு நிமிடமும் பாவம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

கவிஞனே! [illegible]குத் தெரியுமா? உலகத்தில் கொலை செய்வது பாவமல்ல—தர்மத்தின் சார்பில் நின்று செய்யப்படும் கொலை புண்ணியமாகவே கருதப்படும். இறைவன்தான் கொலைகாரனையும் படைத்தான். ஆனால் அவன் படைத்த மனிதன் தர்மத்துக்குக் கட்டுப்பட்டவனாக இருக்க வேண்டும். எந்த மனிதன் அதர்மமான முறையில் கொலை செய்கிறானோ அவன் நரகத்தின் குழியில் பலவந்தமாகத் தள்ளப்படுவான்.

திருடவேண்டும் என்பது தெய்வத்தின் விருப்பமே. கொடுமையான முறையில் பணத்தைப்பதுக்கி வைப்பவனிடமிருந்து திருடி அதைப் பகிர்ந்து கொடுக்கிறவன்

தெய்வத்துக்கு மிகவும் வேண்டியவன் ஆவான். ஆனால் ஏழைகளின் உழைப்பில் சுரண்டல் வாழ்க்கை நடத்தும் பணக்காரத் திருடர்கள் இருக்கிறார்களே அவர்கள் ஒருநாளாவது மோட்சத்துக்குப் போனதாகச் சரித்திரம் இல்லை.

தர்மத்தின் சார்பில் சொல்லப்படும் பொய்க்கும் தர்மத்தின் சார்பில் நிகழும் தீமைக்கும் தெய்வலோகத்தில் என்றைக்குமே மன்னிப்புண்டு. தர்மம் ஒன்றே அந்த இடத்தில் [illegible] பொருளாகக் கவனிக்கப்படுகிறது.

தசை ஆசையால் நடைபெறும் விபச்சாரம் மனிதனின் பலவீனம் என்றே இறைவனின் நீதிமன்றம் கூறுகின்றது. விபச்சாரம் என்றைக்குமே பாவமாகக் கருதப்பட்டதில்லை.

ஆனால்... ...பாசமுள்ள மனைவிக்குக் கணவன் செய்கின்ற துரோகமும் பாசமுள்ள கணவனுக்கு மனைவி செய்கின்ற துரோகமும் இரண்டு பெரிய பாவங்களாகும். அப்படிப்பட்ட கணவனுக்கும் மனைவிக்கும் நரகத்தின் கதவுகள் எப்போதுமே திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன.

பூமியில் கொடை கொடுக்கிறவர்களெல்லாம் நேரே மோட்சத்துக்குப் போய் விடுவதில்லை. புகைப்படம் பிடிப்பவனையும் பத்திரிகை நிருபர்களையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு கொடை கொடுத்தவன் இதோ இந்த நரகத்திலே தான் தள்ளப்பட்டிருக்கிறான்.

கோயில் பணத்தைத் திருடி ஊரைக் காப்பாற்றியவன் மோட்சத்தில் இருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ஊரார் [illegible]த்தைக் கொள்ளையடித்து கோயில் கட்டியவனெல்லாம் நரகத்துக்கு வராமல் போனதில்லை.

கூட்டத்திலிருக்கிறவன் கந்தலுடையோடு நின்று கடவுளைக் கும்பிடும் போது அவனைக் கவனிப்பதை விட்டு பிரகாரம் வந்து கொண்டிருக்கும் சுவாமிக்குப் பட்டுப் போர்த்துகிறவன் நேரே நரகத்தில் வந்து விழுவதை நான் கண்டிருக்கிறேன். அவனுக்குத் தெய்வ நீதிப்படி மன்னிப்புக் கொடுக்கப்படமாட்டாது.

தன்னை வருத்திக்கொண்டு அடுத்தவனை வளர்த்தவன் எப்படி மோட்சத்துக்குப் போகிறானோ அப்படியே அடுத்தவனை அழித்துத் தன் வளர்ச்சியை ஏற்படுத்

திக் கொள்கிறவனும் நரகத்துக்கு தட புடலாக வந்து சேருகிறுன்.

உள்ளத்தில் நஞ்சை வைத்துக் கொண்டு வாயாலே தேனைக்கொட்டுகிறவன் எவ னுவது இருப்பானுனல் அவன் நரகத் துக்கென்றே தயாராகிறுன் என்று பொருள்.

காவலனின் 'நரக விளக்கம்' நீண்டு வளர்ந்து அமைதியான அந்த வெளி மண்டபத்தில் வேத வாக்காக ஒலித்துக் கொண்டிருந்தது.

நான் சாளரத்தால் நரகத்தை எட்டிப் பார்த்தேன். பெரும்பான்மையான அர சியல்வாதிகள் அங்கே இருந்தார்கள். அதிகமான பாவத்தை உலகத்தில் செய் பவர்கள் அவர்கள்தான் என்பதைக் கண்டு கொண்டேன்.

இரண்டாவதாக நரகத்தில் இடம்பிடித் துக் கொண்டிருப்பவர்கள் மதவாதி களே! எவனெல்லாம் சமயத்தை வைத் துப் பூமியில் வியாபாரம் செய்தானே அவனெல்லாம் நரகத்தில் நன்றுக அனு பவித்துக் கொண்டிருந்தான்.

பாவம்...... ஒரு அப்பாவி மனிதன் என் னைப் பார்த்துக் கூச்சல் போட்டான்:

'ஐயா! தெய்வத்தை மட்டும் ஒருநாளும் ஏமாற்ற நினைக்காதீர்கள். அந்த விஷயத்தில் நாங்கள் தோற்றுப் போனோம்!' நான் நரகத்தின் காட்சிகளுக்கு அப்பாலே மண்டபத்தின் வெளி வீதிக்கு வந்து சேர்ந்தேன்.

தெய்வம் ஒரு பெரிய புத்திசாலி என்ற உண்மை பூமியில் இருக்கும் போதே எனக்குத் தெரிந்த ஒன்றுதான் என்றாலும் இவ்வளவு அற்புதமாக அவன் நரகத்தைச் சிருஷ்டித்திருப்பான் என்று இதுவரை நான் நினைத்திருக்கவில்லை.

உண்மைதான்... ...

எல்லாம் வல்ல அந்த இறைவனுக்கு நான் வணக்கம் செலுத்துகிறேன்.

தெய்வமே! என்னை நரகத்துக்கு அனுப்புவதாக இருந்தால்கூட நான் தயாராக இருக்கிறேன்.

உன்னுடைய படைப்பின் அருமையை ரசிக்கும் அரியவாய்ப்பு அங்கே எனக்குக் கிடைக்கும் அல்லவா?

★



## கவிஞனும் சொர்க்கமும்

இதோ.........நான் சொர்க்ககத்தில்
இருந்து கொண்டு பாடுகிறேன்.

இந்த இடம் மிகவும் அருமையானது
மனிதர்களின் வாசனை இந்தப் பக்கம்
வருவதே இல்லை.

படகோட்டியின் பாடல்

பூமியில் எனக்கொரு காதலி இருந்தாளல்லவா? எனது வலது கையின் அணைப்பில் இப்போது அவள் இருக்கிறாள் இறைவன் இடது பக்கம் உட்கார்ந்திருக்கிறான் எனக்கு அருமையான இரண்டு ரசிகர்கள் கிடைத்திருக்கிறார்கள்.

காதலியின் ரசனையை நான் அப்படி ஒன்றும் பாராட்டுவதற்கில்லை. நான் கழுதையைப் போலக் கத்தினாலும் அதை அற்புதமான சங்கீத என்று ரசிப்பதற்கு அவள் கடமைப்பட்டிருக்கிறாள்.

ஆனால் இறைவன் இருக்கிறானே........ அவனுடைய ரசிகத் தன்மையை நான் ஒவ்வொரு நிமிடமும் ரசித்து மகிழ்கிறேன் இறைவன் ஒரு சிறந்த ரசிகனாவும் இருக்கிறான்

சொர்க்கம் எவ்வளவு அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது தெரியுமா? இதோ ......அன்பு காரணமாக என்னுடைய காதலியும் தூய்மையான உள்ளம் காரணமாக நானும் இந்த சொர்க்கத்தில் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறோம்.

பூமியில் எவனெவன் எல்லாம் தர்மத்தைக் காப்பாற்றினானோ அவனுக்கெல

லாம் வசதியான வீடுகள் இங்கே கட்டப்பட்டிருக்கின்றன. சுவர்க்கம் என்பதே தர்மத்தின் வீடு என்றுதான் சொல்லுவேன்.

சொர்க்கத்தில் இருப்பவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் குழந்தைகளாக இருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் அவர்களுடைய பிஞ்சு முகங்களைத் தவிர வேறு எதையுமே நான் காண்பதில்லை.

முன்பு நான் நோயாளியாக இருந்த போது எனக்கு வைத்தியம் செய்த மருத்துவர் ஒருவர் இங்கே தான் இருக்கிறார். 'நான் பூமியில் லஞ்சம் வாங்கியதில்லை. அதனால் மிகவும் தைரியமாக இந்த இடத்திற்கு வந்தேன்' என்று ஒருமுறை அவர் என்னிடம் கூறினார்.

உலக வாழ்க்கையில் குருடனுக்கு வழி காட்டியவனும் முடவனுக்குச் சோறு போட்டவனும் பைத்தியக்காரனைப் பராமரித்தவனும் மரணத்தின் பின்பு சொர்க்கத்துக்கே வந்து சேருகிறார்கள்.

கோயில் எழுப்பியவனை விட பள்ளிக்கூடம் கட்டிக் கொடுத்தவனுக்கும் அர்ச்சனை செய்தவனை விட பாடம் சொல்

லித் தந்த ஆசிரியனுக்கும் சொர்க்கத்தில் அதிக மரியாதை தரப்படுகிறது.

பூமியில் மனப்பூர்வமாக நேசித்த காதலர்கள் இங்கே தான் வருகிறார்கள். காதலர்களை இறைவன் என்றைக்குமே கைவிட்டதில்லை.

ஆனால் சொர்க்கத்தில் நான் இப்படிச் சந்தித்த காதலர்கள் மிக மிகச் சிலரே! விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில் அவர்களுடைய தொகை [illegible] குறைவாக[illegible] காணப்படுகிறது.

கடற்கரையில் சுற்றித் திரிகிறவர்களையெல்லாம் உலகத்தில் காதலர்கள் என்று சொல்வதுண்டு... தெய்வத்தின் அகராதியில் அப்படி இல்லை. உறவு என்பது படுக்கை அறையில் தான் இருக்கிறது என்று நினைக்கும் எந்தக் காதலர்களும் சொர்க்கத்துக்குத் தகுதியற்றவர்கள் என்றே ஆண்டவனின் சட்டம் கூறுகிறது.

நான் பூமியை எந்த அளவுக்குப் புரிந்து கொண்டிருக்கிறேனோ...அதே அளவுக்கு நரகம் சொர்க்கம் என்பவை பற்றியும் இப்பொழுது நன்றாகப் புரிந்து கொண்

டிருக்கிறேன். இறைவனின் அற்புதத்தை வியந்து புன்முறுவல் செய்வது ஒன்றே இப்பொழுது எனக்குத் தொழிலாக இருக்கிறது.

இதோ......இறைவன் மிகவும் உரிமை யோடு என்னைப் பார்த்துப் பேசத் தொடங்குகின்ருன். இந்த அழகான பூங் காவில் நானும் என்னுடைய காதலியும் மெய்மறந்து அவனுடைய வார்த்தைக ளில் மயங்கிக் கிடக்கின்ருேம்.

'கவிஞனே! கவிஞனே! என்று [illegible]க்கும் போல் அவன் ஆரம்பிக்கிருன்.

'குழந்தைகளிடம் இல்லாத உணர்வை யும், மகான்களிடம் காணப்படாத தெளிவையும், பூமியில் தவம் செய்த வர்கள் பெருத ஞானத்தையும் நீ பெற் றிருக்கிருய்......அதனுல்தான் ஏ! கவி ஞனே......உனக்குப் பக்கத்திலேயே உட் கார்ந்து கொண்டிருக்க வேண்டும் என்று எனக்கு ஒரே ஆசையாக இருக்கிறது.

மனிதன்தான் மூங்கிலை வெட்டி இனிய புல்லாங் குழலை உருவாக்கினுன்—ஆனுல் புல்லாங் குழல் தருகின்ற அருமையான இசையை மனிதனே தந்துவிட முடியும் என்று நீ நினைக்கிருயா? நானும் அப்ப

டித்தான்...... உன்னைப் படைக்கத்தான் என்னால் முடிந்ததே தவிர உன்னைப் போல் இவ்வளவு அழகான பாடல்களைப் பாட நான் தகுதியற்றவனாக இருக்கிறேன்.

நீ என்னுடைய படைப்பாக இருக்கலாம்......நான் தெய்வமாகவும் இருக்கலாம்......ஆனால் உன்னுடைய அருமையான வாழ்க்கையை நான் என்றுமே பெற்றுவிடமாட்டேன்...... நீ ஒரு வகையில் என்னையும் மிஞ்சி வி[illegible] இந்த செ[illegible]கத்தின் தலைவனாக இருப்பதற்கு எல்லா வகையிலும் பொருத்தமானவன் நீயே!

அனுபவம் என்பது ஒரு பெரிய சங்கதி— அனுபவம் என்ற ஒன்றை மட்டும் நான் உலகத்தில் ஏற்படுத்தி இருக்கவில்லை என்றால் பூமியில் உள்ளவர்கள் எல்லோருமே என்னை மறந்து போயிருப்பார்கள். உன்னைப் போன்ற அருமையான ஒரு நண்பனின் உறவை நான் இழக்க வேண்டி இருந்திருக்கும்.

கவிஞனே!......... !கவிஞனே!......

நீ தத்துவங்களை ஓயாமல் முழங்கிக் கொண்டிருப்பதால் எல்லாம் அறிந்த

வன். எல்லா இடங்களிலும் உன் பாடல்கள் ஒலிப்பதால் எங்கும் நிறைந்தவன். அழியாத உண்மைகளைச் சொல்லி விட்டாய் என்பதால் என்றும் வாழ்பவன்

நீ படைக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரை நான் உன்னை அணுவணுவாக எடை போட்டுப் பார்த்திருக்கிறேன். கவிஞனே! உலகம் உன்னை 'இரண்டாவது கடவுள்' என்று அழைப்பதாக... மோட்சம் உன்னைக் கௌரவிப்பதாக... என் வாழ்த்துக்கள் என்றும் உன் பக்கத்திலேயே இருப்பதாக......

தெய்வத்தின் வார்த்தைகள் சொர்க்கத்தின் சுவர்கள் நான்கிலும் மோதி இசை பாடுகின்றன.

காதலி பக்கத்திலிருக்கும் போது ஒருவனுக்குக் கிடைக்கின்ற பாராட்டு எப்பொழுதுமே தனித்தன்மை வாய்ந்ததாகும் மிகவும் பெருமையோடு நான் என்னுடைய காதலியைப் பார்க்கிறேன். அவளுடைய கன்னம் சிவந்து பழுக்கிறது. தெய்வம் கூடப் பாராட்டும் அளவுக்கு நான் விஷயம் உள்ளவன், என்ற உண்மையை இப்பொழுது அவள் ஒப்புக் கொள்கிறாள்.

நாங்கள் இருவரும் இறைவனிடம் இருந்து விடை பெற்றுக்கொண்டு எங் குடிசையை நோக்கி நடக்கிறோம்.

இந்த சொர்க்கம் மிகவும் அற்புதமானது என்பதும் தெய்வம் ஒரு அதிசய வல்லமை என்பதும் நான் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளும் உண்மைகளே! அதற்காக நான் சொர்க்கத்தை மதிக்கிறேன் தெய்வத்தை வணங்குகின்றேன் ஆனால்....................

நான் கவிஞனாக இருப்பதால் எனக்கு இந்த இடத்தில் ஒரு பெரிய குறை தென்படுகிறது. 'துன்பம்' என்ற இனிமையான ஒரு விஷயத்தை இங்கு பார்க்க முடியவில்லையே என்பதுதான் அது.



PRINTED AT
NEW LEELA PRESS
33 ST SEBASTIAN HILL
HULFTSDORF
COLOMBO 12